Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

Regd. No.
TN / CC (S) DN / 119 / 09-11

Licensed to Post without prepayment
WPP No. TN / CC (S) DN / 51 / 09-11

வேணு: 15 ஏப்ரல் 2010 கானம் : 9



– மார்ச் 18, 2010 – At the feet of My Master –

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200(173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

Related Websites : www.namadwaar.org
Email : contact@namadwaar.org

NO FAME · NO NAME · NO SELF INTEREST · ONLY GOD

ஸ்ரீ ஸ்ரீ:
மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 ஏப்ரல் 2010 கானம் : 9



சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீராமநவமி உற்சவம் 24 மார்ச் 2010



மதுராபுரி ஆஸ்ரமத்தில் ஏகாதசியின்பொழுது 11 மார்ச் 2010





கேரளா எர்ணாகுளம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் விஜயத்தின்பொழுது 23 பிப்ரவரி 2010



சிங்கப்பூர் Geylang சிவன் கோவிலில் மஹாசிவராத்திரியின்பொழுது சிங்கப்பூர் ஜனாதிபதி பெருமதிப்பிற்குரிய ஸ்ரீநாதன், பெருமதிப்பிற்குரிய நிதியமைச்சர், சிவன் கோவில் Chairman ஸ்ரீஜெயச்சந்திரன் ஆகியோருடன் ஸ்ரீபாக்யநாதன் - 13 மார்ச் 2010




சிங்கப்பூர் Geylang சிவன் கோவிலில் மஹாசிவராத்திரி – "அருணாசல மஹிமை மற்றும் சிவநாம மஹிமை" ஸ்ரீபாக்யநாதன் உரை - 13 மார்ச் 2010






சிங்கப்பூர் Geylangஇல் சிங்கப்பூர் துணை சபாநாயகர்மற்றும் Mcpherson Mayor முன்னிலையில் on GLORY OF HINDUISM 12 மார்ச் 2010 - ஸ்ரீபாக்யநாதன் உரை




மலேசியா கோலாலம்பூரில் நாமத்வார் மையம் துவக்கம் மார்ச் 20, 2010





சென்னை பிரேமிக பவனத்தில் ஸ்ரீராமாயண உபன்யாசம் ஸ்ரீவல்லபதாஸ் முரளி மார்ச் 1–19 2010



15th February, Poornimaji attending an 'Interfaith Get-together on Awakening Inner Peace for Harmony in Society" organised by the Prajapita Brahma Kumaris - Ishwariya Vishwa Vidyalaya in Chennai





அமெரிக்கா– பெருமதிப்பிற்குரிய டெக்ஸாஸ் மாகாண மேன்வல்சிட்டி மேயர் டலோரஸ்மார்டின் ரிப்பன் வெட்டி நாமத்வார் மையத்தை திறந்து வைக்கிறார் மார்ச் 28, 2010 அவருடன் ஸ்ரீராமானுஜம்







இடம்: துவக்கவிழாவின்பொழுது மேடையருகே ஸ்ரீஸ்ரீனிவாசன், ஸ்ரீதிவன், ஸ்ரீஹரிராம், ஸ்ரீகோபால்லால்வலம்: வேதம் ஸ்ரீநாராயணன் ஸ்ரீஸ்வாமிஜியின் வாழ்த்து செய்தியை படிக்கிறார்

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:15 ஏப்ரல் 2010 கானம்:9

உள்ளே ...


| | | | |
|---|---|---|---|
| கீர்த்தனம் | 02 | பாகவத பழம் -2ம்பாகம்- 1 | 12 |
| மதுரமான மஹனீயர் - 169 | 03 | மலர் மாலை | 21 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து ..... | 08 | மாலே மணிவண்ணா - 82 | 32 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

*கதா மதீயா ஜுஷமாண: ப்ரியான்ஸ்த்வமாவேஸ்ய மாமாத்மனி ஸந்தமேகம்।*
*ஸர்வேஷு பூதேஷ்வதியக்ஞமீஸம் யஜஸ்வ யோகேன ச கர்ம ஹின்வன்॥*
*போகேன புண்யம் குஸலேன பாபம் கலேவரம் காலஜவேன ஹித்வா।*
*கீர்த்திம் விஸுத்தாம் ஸுரலோககீதாம் யஜஸ்வ மாமேஷ்யஸி முக்தபந்த:॥*

**"ப்ரியமான என்னுடைய கதைகளை கேட்டுக் கொண்டும், எல்லா ஜீவன்களிலும் நான் ஒருவனே இருப்பதாக பாவித்துக்கொண்டும், புண்யங்களை போகங்களால் கழித்தும், நற்செயல்களால் பாவங்களையழித்தும், காலத்தினால் உடம்பை விடுத்தும், ஸ்வர்க்கத்திலேயும் போற்றப்படும் நிர்மலமான கீர்த்தியையும் பெற்று, நீ எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபட்டு, என்னை அடைவாய்" என்று ஸ்ரீநரசிம்ம பகவான் ப்ரஹ்லாதனிடம் கூறுகிறார்.**

**(பாகவதம்7/10/12-13)**



## *ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்*

*ராகம்: தோடி   தாளம்: ஜம்பை*

*பல்லவி*

*ஸத்புத்திம் தேஹி மே க்ருஷ்ண - ஸதா*
*ஶ்ரவண கீர்த்தனாதி நவவிதபக்தி ஸித்யர்த்தம்*
*(ஸத்)*

*சரணம்*

*ராஜஸ தாமஸ ஸ்வபாவம் வினாஶய*
*ராஜாதிராஜ ராஜகோபால*
*பஜனஶீலப பக்தார்த்திஹர*
*நிஜஜன ஸஹித முரளீதர*
*(ஸத்)*



*நாமாவளி*

*ஸ்மித ஸ்மித பாஷித ஸௌந்தர க்ருஷ்ண*
*ஸ்மித ஸ்மித ஹாஸ மன்மத க்ருஷ்ண*
*ஸ்மித ஸ்மித வதன ஸ்ருங்கார க்ருஷ்ண*
*ஸ்மித ஸ்மித லாவண்ய லலித க்ருஷ்ண*



## *மதுரமான மஹனீயர் - 169*

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

உலகெங்கிலும் மஹாமந்திரம் ஒலித்து அதன் மூலம் உலக மாந்தர்கள் இகபர நலன்களை பெற வேண்டும் என்பதே நமது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அவா. அதற்காக நாமத்வார் மையங்கள் பல இடங்களில் தோன்றி வருகின்றன. சமீபத்தில் சௌ.பூர்ணிமாகுமாரஸ்வாமி அவர்கள் ஆஸ்திரேலியா சென்றிருந்தார். அப்பொழுது நாமத்வாருக்கென்று பிரத்யேகமாக ஒரு இடம், சிட்னியில் பல அன்பர்களின் பெருமுயற்சியால் வாங்கப்பட்டது.

ஸ்ரீராமானுஜம் மற்றும் சௌ.பூர்ணிமாகுமாரஸ்வாமி ஆகியோர் அமெரிக்காவிற்கு கடந்த மூன்று வருடங்களாக சென்று வருகின்றனர். அப்பொழுது எல்லாம் சியாட்டில், சிகாகோ, நியூயார்க், பாஸ்டன், ஹூஸ்டன், நியூஹாம்ப்ஷைர், நியூ ஜெர்ஸி , டல்லாஸ் அகிய பல இடங்களில் பல பாகவத சப்தாஹங்களும், மஹாமந்திர கீர்த்தன சத்சங்கங்களும், self-improvement கூட்டங்களும் நிகழ்த்தியுள்ளனர். இம்முறையும் ஸ்ரீராமானுஜம் சென்றிருந்தபொழுது, சத்சங்கங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. பாகவத சப்தாஹம் விமரிசையாக டல்லஸிலும், ஹூஸ்டனிலும் நடைபெற்றது. இந்த சமயத்தில், GOD USA TRUST அமைப்பினரின் கூட்டு முயற்சியால், ஒரு இடம் டெக்சாஸ் மாகாணத்தில் வாங்கப்பட்டதை சென்ற இதழில் தெரிவித்திருந்தோம்.

இந்த நாமத்வார் அமைந்த இல்லத்தை தேர்வு செய்வதிலும், அதனை செப்பனிடுவதிலும் ஸ்ரீலக்ஷ்மிஜீவன் மற்றும் ஸ்ரீநிஷாஸ்ரீராம் தம்பதிகள் அரும்பணியாற்றினர், ஸ்ரீரம்யாஸ்ரீனிவாசன், ஸ்ரீசுஜாதாசங்கர், ஸ்ரீநித்யாஸ்ரீராம் ஆகிய தம்பதிகள், ஸ்ரீநாராயணன் மற்றும் பல GOD USA அமைப்பை



சேர்ந்த அன்பர்கள், மேலும் பல பணிகளை பொறுப்பேற்று, மிக நன்கு செய்திருந்தனர். பிப்ரவரி14 அன்று நாமகீர்த்தனம் செய்து ஆரம்பிக்கப்பட்ட நாமத்வார், பிப்ரவரி28 அன்று பெருமதிப்பிற்குரிய டெக்சாஸ் மாகாண மேன்வல் நகர மேயர் **டெலோரஸ் மார்டின்** அவர்களால், பொதுமக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஸ்ரீலக்ஷ்மிஜீவன் தம்பதிகள் தற்பொழுது இந்த நாமத்வாரில் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து வருகின்றனர். பிப்ரவரி 28 அன்று சிகாகோ, பாஸ்டன், நியூஹாம்ப்ஷைர், கனக்டிகட், ப்ளோரிடா, கலிபோர்னியா, டல்லஸ் ஆகிய அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளிலிருந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட அன்பர்கள் வந்திருந்தனர். ஸ்ரீஷீரடி சாயிபாபா ஜாலாராம் மந்திரின் தலைவர் ஸ்ரீமாஜி, ஸ்ரீமீனாக்ஷி கோவிலின் துணைத்தலைவர் ஸ்ரீதூப்புல்நரசிம்மன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர்..

அப்பொழுது துவக்க நிகழ்ச்சியாக ஸ்ரீநாராயணன், GOD USA அமைப்பினருக்காக, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளியிருந்த வாழ்த்து செய்தியை வாசித்தார். மேயர் அவர்களை வரவேற்று, திரு.எம்.கே.ராமானுஜம் அவருக்கு, "உலக மாந்தர் உய்ய வேண்டி GOD USA அமைப்பு செய்து வரும் பல்வேறு பணிகளையும், தன்னலமற்ற நோக்கங்களையும்" விளக்கினார். மேயர் அவர்கள், இதை அறிந்து மிகவும் மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் போனார். இது குறித்து பின்னர் தெரிவிக்கையில் "இத்தகைய உயர்ந்த லட்சியமும், உலக மாந்தரின் மேல் அன்பும் கொண்ட அமைப்பினர் இன்றும் உலகில் உள்ளனர் என்பதை தாம் அறிந்து, பெருமகிழ்ச்சி கொண்டதாகவும், உணர்ச்சி பெருக்கில் தொண்டை



தழுதழுத்ததால் பேசமுடியாமல் போனதாகவும்" குறிப்பிட்டுள்ளார். மேலும் "இது ஒரு மிக அற்புதமான ஆரம்பம். உலகஅமைதிக்காக இங்கு நடத்தப்படும் பிரார்த்தனைகள், உலகிற்கு மிகுந்த நன்மையை செய்யும். இம்மையம் பின்னாட்களில் உலகிற்கு மிகுந்த சேவை செய்யும் என்பதில் தாம் பெருநம்பிக்கை கொண்டுள்ளதாகவும்" குறிப்பிட்டுள்ளார். இந்த நாமத்வார் திறப்பு விழாவில், தலைமை தாங்க அழைக்கப்பட்டிருந்தது, தமக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் என்றும் குறிப்பிடுகிறார்.

திரு.எம்.கே.ராமானுஜம் பேசுகையில், "பல சமயங்கள் போதிப்பது ஒரே உண்மையைதான். சமயங்களில் காணப்படும் ஒற்றுமையை பார்ப்பதே முக்கியம். ஒரு பூக்கொத்தில் ஒரு விதமான மலர் மட்டும் இல்லாமல், பல வித மலர்கள் சேர்ந்து நறுமணம் வீசுவது அழகு. அதுபோல, பலசமயங்களில் காணப்படும் ஒரு உண்மையை நாமத்வார் மிக அழகாக வெளிப்படுத்துகிறது" என்றார்.

ஸ்ரீஸ்வாமிஜி பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் இரண்டு வருடங்களுக்கு முன்பே, நாமமையம் ஒன்று, இரண்டு ஏக்கர் பரப்பில் ஹூஸ்டனில் வரும் என தெரிவித்திருந்தார். ஸ்ரீஸ்வாமிஜி இரண்டு ஏக்கர் என சொன்னதையே குறிப்பாக கொண்டு தேடியதில், அன்பர்களின் பெருமுயற்சியால், நான்கு மாதங்கள் முன்பு இந்த இடம் கிடைத்தது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளினால் அனைத்தும் நன்கு நடந்து முடிந்தது. நாமத்வாரை மேயர் திறந்து வைத்த நாள், மஹாமந்திரத்தின் ஸ்வரூபமாகவே இருக்கும் ஸ்ரீக்ருஷ்ணசைதன்யமஹாபிரபு அவர்களின் ஜெயந்தி தினமாக அமைந்தது ஒரு விசேஷம். விழாமுடிவில், சிலி தேசத்தில் ஏற்பட்ட, பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும், மஹாமந்திர கீர்த்தனம் கலந்த பிரார்த்தனை செய்யப்பட்டது.





## பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி: நான் Mechanical ஆக நாமகீர்த்தனம் செய்து வருகின்றேன்!**

பதில்: நம்மால் Mechanical ஆகத்தான், நாமகீர்த்தனம் செய்ய முடியும். அதை நாம் விடாமல் செய்து வந்தால், பக்தியையும் ஈடுபாட்டையும், குருநாதர் தகுந்த காலத்தில், தானே தருவார்.

**கேள்வி: ஓய்வு பெற்ற பின், முழுமையாக சாதனையில் ஈடுபடலாம் என்றிருக்கின்றேன்!**

பதில்: மனிதன் இளம் வயதில், அங்கு ஓடி, இங்கு ஓடி, வேலைபார்ப்பான். தன்னுடைய இளமையை பற்றியும், ஒரு பெருமை இருக்கும். வயதான பிறகு, அவனால், ஆடி ஓடி, வேலை செய்ய முடியாது. உடலும் தளர்ந்து விடும். அப்பொழுது என்ன செய்வான் தெரியுமா? "தான் சின்ன வயதில் எப்படி இருந்தேன் தெரியுமா? என்ன என்ன காரியங்களை சாதித்தேன் தெரியுமா?" என்று அதை பற்றி பேசியும், புலம்பியுமே காலத்தை போக்குவான். அப்படி இல்லாமல் ஆரம்பத்திலிருந்தே, ஸத்ஸங்கம் பழகி வர வேண்டும். அப்படி இருந்தால், வயதானபிறகு அதிகமாக ஈடுபட முடியும்.



**.கேள்வி: வெளிநாடுகளில் எவ்வளவோ கோவில்களுக்கு செல்கின்றோம். அந்த கோவில்கள் ப்ரும்மாண்டமாக, அழகாக, சுத்தமாக இருக்கின்றது. நமது நாட்டு கோவில்கள் அழுக்காக, எண்ணை பிசுக்குடன் இருக்கின்றது! ஆனால், நம் ஊர் கோவில்களில் கிடைக்கும் சாந்தி அங்கு கிடைப்பதில்லையே! ஏன்?**





பதில்: அதுதான் நம் கோவில்களின் பெருமை. இந்த கோவில்கள் எல்லாம் தேவர்களாலும், மஹரிஷிகளாலும், தவம் உடைய பெரியோர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்டவைகள். பராமரிப்பு, சிரத்தை , பக்தி எல்லாம் குறைந்த போதும் இன்றும் அவைகள் சக்தியுடன் விளங்குகின்றன. இந்த கோவில்களில் எல்லாம், விடாமல் நாமகீர்த்தனம் நடந்து வர, அதனுடைய சான்னித்யமும், சக்தியும் பெருகும்.


**PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

SAVITHRI VASUDEVAN B.Sc. A.I.I.I.
Retd. Officer(VRS)
United India Insurance Co. Ltd.
General Insurance Consultant

STAR Health Insurance
The Health Insurance Specialist
24 Dr. Sadasivam Road,
T Nagar. Chennai 600 017
PH: 28340990 Mob: 98413 07152
Email:vasaja@yahoo.com

- ✓*Health Insurance* ✓*Personal Accident (Individual & Group)*
- ✓*Overseas Mediclaim* ✓*Star Travel Protect Policy*
- ✓*Householders & Shopkeepers Insurance*
- ✓*Student Safety Insurance*
- ✓*Fire* ✓*Marine* ✓*Motor* ✓ *Engineering*
- ✓*Office Compact Policy* ✓*Professional Indemnity*
- ✓*Workmen Compensation (Factory)*




## சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து ...

"ஹரே ராம" மஹாமந்திரமானது உலகெங்கிலும் ஒலிக்க வேண்டும் என்பதே ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நோக்கம். அதை நிறைவேற்றும் பொருட்டு, GLOBAL ORGANISATION FOR DIVINITY என்ற அமைப்பு, ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இந்தியாவிலும், அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் மற்றும் பல நாடுகளிலும் இந்த அமைப்பு, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

கடந்த மார்ச் 10 முதல் 22 வரை சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் GODIVINITY அமைப்பின் சார்பில் சத்சங்கங்கள் நடைபெற்றன. இவற்றில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசியுடன், அவரது அந்தரங்க செயலாளர் டாக்டர்.பாக்கியநாதன் கலந்து கொண்டார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் மிகவும் அன்பு பூண்டவர்களான ஸ்ரீஜெயச்சந்திரன் ஸ்ரீமதிலக்ஷ்மி தம்பதியினர் இந்த சத்சங்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார்கள்.

மார்ச் 12ஆம் தேதியன்று GEYLANG சிவன் கோவிலில் அதன் CHAIRMAN ஸ்ரீஜெயச்சந்திரன் அவர்களின் ஏற்பாட்டில் சத்சங்கம் நடந்தது. இதில் சிங்கப்பூர் துணை சபாநாயகர், MACPHERSON MAYOR மற்றும் சமூக சேவகர்கள் முன்னிலையில் GLORY OF HINDUISM என்ற தலைப்பில் ஸ்ரீபாக்கியநாதன் உரையாற்றினார். "இந்து மதத்தின் தனி பெருமை பற்றியும், உண்மையான உலகளாவிய சகோதரத்துவமும், அன்பும், ஆன்மீக விழிப்புணர்வினால் மட்டுமே ஏற்படமுடியும்" எனும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபதேசம் குறித்து, அவர் இங்கு விவரித்து பேசியது எல்லோரையும் மிகவும் கவர்ந்தது. மேலும், GODIVINITY அமைப்பின், செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

மார்ச் 13 ஆம் தேதியன்று GEYLANG சிவன் கோவிலில் மிகவும் பிரம்மாண்டமான மகாசிவராத்திரி உற்சவம் நடைபெற்றது, ஸ்ரீஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையிலான குழுவினரால் தேவாரம் ஓதுதல், ரத புறப்பாடு, விசேஷ ஆராதனைகள் ஆகியவை கொள்ளை அழகுடன், இதில் விமரிசையாக நடந்தது. இந்த உற்சவத்தில், தமிழிலும் ஆங்கிலத்திலும், அருணாசல மகிமை மற்றும் சிவ நாம மகிமை பற்றியும் ஸ்ரீபாக்கியநாதன் உரையாற்றினார். இந்த மகாசிவராத்திரி உற்சவத்தில், சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி பெருமதிப்பிற்குரிய ஸ்ரீநாதன் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ 3500 அன்பர்கள் கலந்துகொண்டு Dr.பாக்யநாதன் அவர்களின் உரையைக்கேட்டு மகிழ்ந்தார்கள்.

நமது சத்சங்க அன்பர்களான ஸ்ரீபாலசுப்பிரமணியன் ஸ்ரீமதிஉமா தம்பதியினரால் ஞாயிறு தோறும் ஸ்ரீஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் நடத்தப்பெறும் மகாமந்திர கீர்த்தன சத்சங்கத்தில் மார்ச்14 மற்றும் 21ஆம் தேதிகளில் ஸ்ரீபாக்கியநாதன் கலந்து கொண்டார். அங்கு, அனைத்து பக்தர்களையும் நெகிழ வைக்கும் வகையில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றி உரையாற்றினார்.

மார்ச் 15 ஆம் தேதி Global Indian International School -இல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, ஸ்ரீபாக்கியநாதன் GOD INDIA TRUST சார்பில் "Realizing Your True Strength" என்ற தலைப்பில் உரையாற்றினார். அவ்வுரையில் "உண்மையான பலம் என்பது ஆன்ம பலமே. இதுவே அனைத்து மதங்களின் சாரம்" என குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில், மாணவர்கள் மிக ஆர்வமுடன் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

மார்ச் 16ஆம் தேதி ஸ்ரீஜெயச்சந்திரன் அவர்களின்



இல்லத்தில் சத்சங்கம் நடந்தது. இங்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளியுள்ள கலிதர்மஉந்தியார் பற்றி, ஸ்ரீபாக்யநாதன் பேசுகையில் "கலியில் நாமசங்கீர்த்தனம் சுலபமாக இறைவனிடம் கொண்டு சேர்க்கவல்லது. இதை கலிதர்மஉந்தியாரில் ஸ்ரீஸ்வாமிஜி கூறுகிறார்" என்று அழகாக விளக்கினார். மார்ச்21ஆம் தேதி "ஸ்ரீகுருப்ரேமாம்ருதம்" என்ற தலைப்பில் ஸ்ரீபாலசுப்பிரமணியம் அவர்களின் இல்லத்தில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களை பற்றி இரண்டு மணிநேரம் உரையாற்றினார்.

மார்ச்18 முதல் மார்ச்20 வரை கோலாலம்பூர் மலேசியா சென்றிருந்தார் ஸ்ரீபாக்யநாதன். அங்கு Global Organisation for Divinity மலேசியா சத்சங்க அன்பர்களான டாக்டர்.பிரேமலதாஜி, ஸ்ரீமதி ராஜேஸ்வரிஜி மற்றும் அவரது சகோதரர் ஸ்ரீநாதன்ஜி ஏற்பாடு செய்திருந்த சத்சங்கங்களில் கலந்து கொண்டார். மிகவும் முக்கிய நிகழ்ச்சியாக, மார்ச்20 ஆம் தேதியன்று கோலாலம்பூரில் நாமத்வாருக்கென்று ஒரு தனி இடம், வாடகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது. ஸ்ரீபாக்கியநாதன் அவர்களின் உரையுடன், அங்கு ஒரு மஹாமந்திர கூட்டுபிரார்த்தனை நடந்தது. அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளிய பிரசாதம் வழங்கப்பட்டது.

இது தவிர ஸ்ரீபாக்கியநாதன், சத்சங்க குழந்தைகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியிலும், அகஸ்தியர் அநாதை ஆஸ்ரமத்தில் நடைபெற்ற மகாமந்திர கீர்த்தனத்திலும் கலந்து கொண்டார். சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் நடைபெற்ற சத்சங்கங்களில், ஸ்ரீஸ்வாமிஜியின்பால் கொண்டிருந்த அளவற்ற அன்பும், மகாமந்திர கீர்த்தனத்தின் மேல் கொண்டிருந்த ஈடுபாடும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் விருப்பம்போல் மஹாமந்திரமானது எங்கும் ஒலிக்க வேண்டும் என்ற தீவிர வேட்கையும், அங்குள்ள பக்தர்களிடம் நிதர்சனமாக தெரிந்தது.



**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Limited**



## பாகவத பழம் ①

**இரண்டாம் பாகம்**

– ஸ்ரீஸ்வாமிஜி

வேதத்தை தொகுத்து கொடுத்தார் வேத வியாசர். மஹத்தான இதிஹாசமான மஹாபாரதத்தை கொடுத்தார். வேதத்தின் அந்தமான உபநிஷத்தின் சாரத்தையும், மஹாபாரதத்தின் அங்கமான பகவத்கீதையையும் அலசி அதன் சாரத்தை எடுத்து அழகான சூத்ரங்களான, ப்ரும்ம சூத்ரத்தை கொடுத்தார். பிரும்ம சூத்ரம், முமுக்ஷுக்களுக்காக மட்டுமே வேத வியாசர் செய்தது. முமுக்ஷுக்கள் என்பவர்களுக்கு மோக்ஷத்திற்கு மட்டுமே ஆசைப்படக்கூடியவர்கள் என்று பொருள்.

மோக்ஷத்திற்காக ஆசைப்படக்கூடியவர்களில் இரண்டு விதம். ஒரு ஸாரர் ரசிக ஹ்ருதயம் கொண்ட முமுக்ஷுக்கள். மற்றொரு ஸாரரோ ரசிக ஹ்ருதயம் அற்ற முமுக்ஷுக்கள். தான் செய்த ப்ரும்மத்தை அரஸிகர்கள்தான் ரஸிப்பார்கள். ரஸிகசிகாமணிகளான முமுக்ஷுக்களுக்கு எப்படி ஆத்ம ஞானத்தை சொல்வது என்று வேதவியாசர் யோசித்தார். அதை மிகவும் ரஸமாக சொல்வோமானால் ரஸிகர்களான முமுக்ஷுக்களுக்கு மட்டும் அல்லாமல் சம்சாரிகளுக்கும் பயன்படும் என்று நினைத்தார்.

**கங்கைக்கு தமிழில் "வானதி" என்று பெயர். வான் உலகத்தில் இருந்து பூமிக்கு வந்த நதியாம் அது. ஆகவே வானதி என்று பெயர். இந்த கங்கையில் நீராடினாலும் நீரைப்பருகினாலும் முக்தி கிடைக்குமாம்.**

அதோடு மட்டுமல்லாமல், கலியில் பிறக்கக்கூடிய ஜீவன்களுக்கு ஒரே கதியாக உள்ள நாமகீர்த்தனத்தையும், அதன் மூலம் ஸ்தாபிக்கவேண்டும் என்றும் நினைத்தார்.

அத்வைதிகள் , விசிஷ்டாத்வைதிகள், த்வைதிகள் போன்ற எல்லோருக்குமே ஒரே சம்மதமாக இருக்க வேண்டுமென்று நினைத்தார். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் கிடைத்தன என்பார்கள். வேத வியாசரோ நிகமம்(வேதம்) என்கிற கற்பகவிருட்சமான மரத்தில் பாகவதம் என்கிற ருசி மிகுந்த பழத்தை கொண்டு மேற்சொன்ன ரசங்களை கொடுத்துள்ளார்.

வேதவியாசர்தான், முதன் முதலாக நாமசித்தாந்தம் செய்தவர். அவர் செய்த நாமசித்தாந்தத்திற்கு, பாகவதம் என்று பெயர். இதை வேத வியாசரே, ஸ்ரீமத்பாகவதத்தில், ஒரு இடத்தில் சூட்சுமமாக தெரிவித்தும் உள்ளார். பரிக்ஷித்து கங்கைகரைக்கு வந்து சுகபகவானை பார்த்து, "இன்னும் வாழ்க்கை ஏழுநாட்களே உள்ளது. எனக்கு என்ன கதி?" என்று வினவும்பொழுது சுகர் சொல்கின்றார்: "கவலைப்படாதே! வேதத்திற்கு துல்லியமானதும் வேதத்திற்கு சம்மதமானதும் ஆன ஒரு க்ரந்தம் உள்ளது; அது உன்னுடைய ஸம்ஸார தாபத்தை போக்கும்" என்கின்றார். அப்பொழுது "இதம் பாகவதம் நாம புராணம் பிரும்மஸம்மிதம்" என்கின்றார். இதை "இதம் பாகவதம், நாம புராணம், பிரும்ம ஸம்மிதம்" என்று பிரித்து பார்ப்போம். இதற்கு "பாகவதம் என்று பெயர். இது நாமாவின் பெருமையை கூற வந்த புராணம். வேதத்திற்கு சமமானது" என்று பொருள் வருகின்றது. அப்படி பார்த்தால், வேத வியாஸரால் செய்யப்பட்ட நாமசித்தாந்தமே ஸ்ரீமத்பாகவதம்.

காசிமாநகரத்திற்கு வாராநஸி என்று ஒரு பெயர் உண்டு.

**பாகவதம், நாமாவின் பெருமையை கூற வந்த புராணம். வேதத்திற்கு சமமானது**

வாரா, அஸி என்ற இரண்டு நதிகள் சங்கமிப்பதாலேயே அந்த க்ஷேத்திரத்திற்கு



**ஸ்ரீமத்பாகவதம் ஒருவனது அறிவையும் மனதின் பரிபாகத்தையும் சிறிது சிறிதாக உயர்த்தி , அவனை ஞானத்தை அடைய வைக்கின்றது.**

அது காரணப்பெயராக வந்தமைந்துள்ளது. இந்த காசிமாநகரில் வாஸம் செய்தாலே போதும். வேறொன்றும் வேண்டாம். முக்தி கிடைக்கும். ஒரு கர்ப்ப வாஸம்(பத்து மாதங்கள்) இருந்தால் கூட போதும். ஒரு மஹா க்ஷேத்திரத்தில் வாஸம் செய்வதே ஞானத்தை அளிக்கும்.

கங்கைக்கு தமிழில் "வானதி" என்று பெயர். வான் உலகத்தில் இருந்து பூமிக்கு வந்த நதி அது. ஆகவே வானதி என்று பெயர்.இந்த கங்கையில் நீராடினாலும் நீரைப்பருகினாலும் முக்தி கிடைக்குமாம். புஷ்கர் என்றொரு மஹாக்ஷேத்திரம். இந்த க்ஷேத்திரத்தில் ஒரு ஏரி உள்ளது. இந்த ஏரியே பகவான். இதன் கரையில் இருந்து வந்தாலே போதும். ஞானம் சித்திக்கும். பிருந்தாவனம் ஸ்ரீகிருஷ்ணன் ப்ரேம லீலைகள் புரிந்த க்ஷேத்திரம். இந்த க்ஷேத்திரத்தில் வசித்து வந்தாலே ப்ரேம பக்தி சித்திக்கும். தென்னாட்டில் திருவண்ணாமலை என்றொரு க்ஷேத்திரம். இங்கு ஒரு மலை உள்ளது. இந்த மலையை சுற்றி வந்து கொண்டிருந்தாலே, ஞானம் சித்திக்கும்.

ஒரு ஊரின் வாஸம், ஒரு நீரின் ஸ்நானம், ஒரு மலையின் பிரதக்ஷிணம் ஆகியவை நமக்கு ஞானத்தை தந்து மோக்ஷத்தை தருவது போல், மற்றொன்றும் உள்ளது.

**வேதத்திற்கு துல்லியமானதும் வேதத்திற்கு சம்மதமானதும் ஆன ஒரு க்ரந்தம் உள்ளது; அது உன்னுடைய ஸம்ஸார தாபத்தை போக்கும்**



ஸதா ஸ்ரீமத்பாகவதம் படிக்கின்றோமோ, அல்லது கேட்கின்றோமோ அது அப்புறம் இருக்கட்டும். ஸ்ரீமத்பாகவத புஸ்தகத்தை தொட்டு, தடவி தூங்கும்பொழுதும்,

**ஸ்ரீமத்பாகவத புஸ்தகத்தை தொட்டு தடவி தூங்கும்பொழுதும் அமரும்பொழுதும் அதை பிரியாமல் இருந்தாலும் ஞானம் சித்தித்து மோக்ஷம் கிடைத்து விடுமாம்.**

அமரும்பொழுதும், அதை பிரியாமல் இருந்தாலும், ஞானம் சித்தித்து, மோக்ஷம் கிடைத்து விடும். ஏனெனில், அது "வாங்மயி" தேவதை. அதாவது வாக்கு ரூபத்தில் உள்ள தெய்வமே ஆகும்.

ஸ்ரீமத்பாகவதத்தில் "தஸமஸ்ய விஶுத்யர்த்தம் நவாமிஹ லக்ஷணம்" என்று ஒரு வரி வருகிரது. இதன் பொருள் என்ன? ஸ்ரீமத்பாகவதம், பன்னிரெண்டு ஸ்கந்தங்களை கொண்டது. இதில் முதலில் ஒன்பது ஸ்கந்தங்களை படித்தால்தான், அதாவது படித்து அதை உணர்ந்தால்தான், பத்தாவது ஸ்கந்தத்தை புரிந்து கொள்ளக்கூடிய பக்குவம் வருமாம். பத்தாவது ஸ்கந்தம் கூட கிருஷ்ண ஜனனம் , பால லீலைகள், வன ஸஞ்சாரம் என்று ஆரம்பித்து மெதுவாக ஸ்ருதி கீதையை புரிந்துகொள்ளக்கூடிய பக்குவத்திற்கு உங்களை தயார் செய்து விடுகின்றது. இது எப்படி உள்ளது என்றால், பிறந்த குழந்தைக்கு தாயார் முலைப்பால்

**ஒரு ஊரின் வாஸம், ஒரு நீரின் ஸ்நானம், ஒரு மலையின் பிரதக்ஷிணம் ஆகியவை நமக்கு ஞானத்தை தருவது போல், மற்றொன்றும் உள்ளது.**

தருகின்றாள். சிறிது நாட்கள் கழித்து பசும்பால் தருகின்றாள். பிறகு சிறிது சிறிதாக ரஸம் சாதம் கரைத்து, குழைத்து, பிறகு பருப்பு சாதம் என்று மெல்ல



மெல்ல அவனுக்கு எது செரிக்குமோ அதைக்கொடுக்கிறாள். பிறகு பெரிய விருந்து சாப்பிடும் அளவிற்கு, அவனுடைய சரீரம் பக்குவம் அடையும்பொழுது, விருந்தும் தருகின்றாள்.

அதுபோல்தான் ஸ்ரீமத்பாகவதமும் ஒருவனது அறிவையும் மனதின் பரிபாகத்தையும் சிறிது சிறிதாக உயர்த்தி, அவனை ஞானத்தை அடைய வைக்கின்றது. சரி! நவம ஸ்கந்தங்களில் உள்ள விஷயங்கள் ஒருவனுக்கு தஸம ஸ்கந்தத்தை புரிந்து கொள்ளக்கூடிய பக்குவத்தை தரும் என்பதற்கு ஸ்ரீமத்பாகவதத்திலேயே, ஏதாவது பிரமாணம் உள்ளதா என்று தேடலாமா?

(கனியும்)



## மலர் மாலை

– ஸ்ரீஸ்வாமிஜி

நம்முடைய நாட்டில், வெகு காலமாக மலர்கள் தெய்வ வழிபாட்டிலும், அலங்காரங்களிலும் மற்றும் பல விதங்களிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. இறைவனுடைய சிருஷ்டியில் மிகவும் அழகானது மலர்கள். மலர்கள் அழகானவை. மலர்கள் மென்மையானவை. மலர்கள் வண்ண மயமானவை. மலர்கள் மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்க கூடியவை.

**தெய்வ வழிபாடுகள் மலர்கள் இல்லாமலும், மலர் மாலைகள் இல்லாமலும் பூர்த்தியாவது இல்லை.**

மகாலட்சுமி தாமரையில் அமர்ந்துள்ளாள். சரஸ்வதி வெள்ளை தாமரையில் அமர்ந்துள்ளாள். திருமாலுடைய கண்கள், பாதங்கள் கைகள் எல்லாம் தாமரையாகவே வர்ணிக்கப்பட்டுள்ளன. பிரம்மாவும் தாமரையில் தோன்றினார். மஹாகணபதிக்கு தும்பை பூ மிகவும் பிரியமானது. தும்பை பூவால் பூஜை செய்தால், துன்பங்கள் அனைத்தும் போகும். நீலசங்குப்புஷ்பம் மஹாகணபதிக்கு மிகவும் ப்ரியம். சிவபெருமானுக்கு கொன்றை புஷ்பம், ஊமத்தம் புஷ்பம், எருக்கம் புஷ்பம் இவைகள் மிகவும் உகந்தது. பிரதோஷ காலத்தில் சிவனை வாழைப்பூவில் உள்ள அரும்புகளாலும் பூஜை செய்வார்கள். தேவிக்கு செம்பருத்தி, அரளி, மருக்கொழுந்து, தவனம், மகிழம், சம்பங்கி போன்றவை உகந்தவை. திருமாலுக்கு கல்ஹாரம், தாமரை, பாரிஜாதம், செண்பகம், மாலதி போன்றவை உகந்தவை. மகாலட்சுமிக்கு தாமரை, தாழம்பூ போன்றவை உகந்தவை. மல்லி, முல்லை, வ்ருக்ஷி போன்ற பொதுவான புஷ்பங்கள் எல்லா தெய்வங்களுக்குமே ஏற்றவை. மகிழமரத்தடியில் அம்பாள், அதாவது தேவி வாசம் செய்கின்றாள். பாரிஜாதம் வருக்ஷத்தின் அடியில் ஹனுமார் நித்ய வாசம் செய்கின்றார். இப்படி மலர்கள்



தெய்வத்துடன் சம்பந்தப்பட்டே இருக்கின்றது.

அந்த காலத்தில் போருக்கு செல்லும் அரசர்கள், வெற்றி அடைவதற்காக மகிழம்பூ மாலை அணிந்து செல்வார்கள். பூக்களுக்கு பல மருத்துவ குணங்களும் உண்டு.

**நம்முடைய மனதில் உள்ள எண்ணங்களை எப்பொழுதெல்லாம் வெளிப்படுத்த விரும்புகின்றோமோ, அப்பொழுதெல்லாம் நாம் மலர்களை பயன்படுத்துகின்றோம். பூஜையில், திருமணத்தில், அன்பின் வெளிப்பாட்டில், மலர்களை உபயோகிப்பதை கவனிக்க வேண்டும். மலர்களுக்கு நம் எண்ணங்களை எடுத்து சென்று அடுத்தவர்களிடம் சேர்க்கும் சக்தி உண்டு.**

தெய்வ வழிபாடுகள் மலர்கள் இல்லாமலும், மலர் மாலைகள் இல்லாமலும் பூர்த்தியாவது இல்லை. இவைகளை தவிரவும், அருகம்புல், வில்வம், துளசி, மாசிபச்சை, வன்னி போன்ற இலைகளும் தெய்வ வழிபாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

அதுபோல் திருமணங்களும் மலர்மாலைகள் இல்லாமல் நடைபெறுவதில்லை. ஒருவருக்கு நாம் நம்முடைய அன்பை வெளிப்படுத்தும் பொழுதும் மலர்களை பயன்படுத்துகின்றோம். பழைய நாகரிகத்தின்படி கணவனை இழந்த பெண்கள் மலர்களை சூடிக்கொள்ளவோ, மலர்மாலைகளை அணிவதற்கோ அனுமதிப்பதில்லை. நம்முடைய மனதில் உள்ள எண்ணங்களை எப்பொழுதெல்லாம் வெளிப்படுத்த விரும்புகின்றோமோ, அப்பொழுதெல்லாம் நாம் மலர்களை பயன்படுத்துகின்றோம். பூஜையில், திருமணத்தில், அன்பின் வெளிப்பாட்டில் மலர்களை



உபயோகிப்பதை கவனிக்க வேண்டும். மலர்களுக்கு, நம் எண்ணங்களை எடுத்து சென்று அடுத்தவர்களிடம் சேர்க்கும் சக்தி உண்டு. பூஜை செய்யும் பொழுது நம்முடைய பிரார்த்தனைகளையும், இறைவனுடைய புகழையும் மலர்கள் மூலமாகவே இறைவனிடம் சேர்ப்பிக்கின்றோம். கோவில்களில் இறைவனுக்கு அர்ப்பணிக்கபட்ட மாலைகள், பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படுகின்றது. அதாவது இறைவனுடைய அருள் பாலிக்கும் எண்ணங்கள் அந்த மாலைகள் மூலமாக, பக்தனை வந்து அடைகின்றது.

திருமண சடங்குகளில் மாலை மாற்றும் வழக்கமும் உண்டு. காரணம் கணவன் மனைவியாக இன்றுமுதல் சேர்ந்து இல்லறம் என்ற உயர்ந்த தர்மத்தை நடத்த உள்ளார்கள். அதில் கணவனின் எண்ணம் ஒன்றாகவும், மனைவியின் எண்ணம் வேறு ஒன்றாகவும் இருந்தால் அவர்களால் எப்படி இல்லற தர்மத்தை செவ்வனே நடத்தமுடியும். இரண்டு பேர்களின் எண்ணங்களும் ஒன்றாக வேண்டும் என்பதற்காக, மாலை மாற்றி, எண்ணங்களை ஒன்றாக்குகின்றார்கள். மனதில் எண்ணங்கள் ஏற்படுவதற்கு வாசனை தான் காரணம். மலர்களில் உள்ள சுகந்தத்திற்கு வாசனை என்று பெயர் உண்டு. இருவருடைய வாசனைகள் (எண்ணங்களின் ஆதாரமான தொகுப்பு) இணைவதே இனிய இல்லறம் என்று பெரியோர்கள் நன்றாக புரிந்து வைத்திருந்தார்கள். பழைய நாகரிகத்தின்படி, கணவனை இழந்தவர்கள் ஏன் மலர்களை சூடிக்கொள்ளவதில்லை என்றால், அந்த மலர்களில் யார் யாருடைய தொடர்பு ஏற்படுகின்றதோ, அவர்களுடைய எண்ணங்களின் தாக்கம் இந்த கைம்பெண்ணிடம் ஏற்பட்டு, அவளை தொந்தரவு செய்யும் என்பதே ஆகும். இன்றும் கூட வெளிநாடுகளில், தங்கள் காதலை வெளிப்படுத்த மலர்களையே தருகின்றனர் அல்லவோ?




## பாலகர்களுக்கு ஒரு கதை



### குரங்குகள் ஏமாற்றிய கதை!

வியாபாரி ஒருவர் கூடை நிறைய குல்லாக்கள் (தொப்பிக்கள்) எடுத்துக்கொண்டு, கிராமம் கிராமமாக சென்று வியாபாரம் செய்து வந்தார். அப்படி அவர் கிராமம் கிராமமாக செல்லும்பொழுது மரங்கள் அடர்ந்த தோப்பு வழியாக செல்ல வேண்டியிருக்கும். மரங்கள் நிறைந்த பிரதேசமாக இருப்பதால் குரங்குகள் அதிகமாக இருக்கும்.

கடுமையான வெயிலில் அலைந்து அலைந்து விற்பனை செய்து வருவதால், சிறிது நேரம் மரத்தடியில் அமர்ந்து ஓய்வெடுப்பார். அவர் அசந்து தூங்கி கொண்டிருக்கும் நேரமாக பார்த்து, குரங்குகள் குல்லாக்களை தூக்கிக்கொண்டு போய் விடும். அப்படி எடுத்து கொண்டு போன குல்லாக்களை தலையில் போட்டுக்கொண்டும் விடும். தூங்கி விழிக்கும் அந்த வியாபாரி, கூடையில் குல்லாக்கள் இல்லாததை கண்டு வியப்படைந்து மேலே பார்ப்பார்.



குரங்குகள் எல்லாம் குல்லாக்களை தலையில் போட்டுக்கொண்டு ஆட்டம் போட்டுக்கொண்டு இருக்கும். அவைகளிடமிருந்து குல்லாக்களை எப்படி வாங்கலாம் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். தன் தலையில் உள்ள குல்லாவை எடுத்து கீழே போடுவார். அதை பார்த்த குரங்குகள் தாங்களும் குல்லாவை எடுத்து கீழே போடும். அவைகளை பொறுக்கி கொண்டு, வியாபாரத்தை தொடர்ந்து செய்து வந்தார். இப்படியே தினமும் நடக்கும்.

வியாபாரிக்கு வயதானது. அவரால் முன்பு போல், அலைந்து

திரிந்து வியாபாரத்தை கவனிக்க முடியவில்லை. அவருடைய பேரனை அழைத்து, தொடர்ந்து வியாபாரத்தை கவனிக்க சொன்னார்.

அப்படி தன்னுடைய பேரனை அனுப்பி வைக்கும்பொழுது, போகும் வழியில் நிறைய குரங்குகள் இருக்கும் விவரத்தையும் சொன்னார். "குரங்குகள் உன்னுடைய கூடையில் உள்ள குல்லாவை எல்லாம் எடுத்து சென்றால், உடனே உன்னுடைய குல்லாவை எடுத்து கீழே போடு. உடனே குரங்குகளும் எடுத்து போட்டு விடும். நீ இதனை யாரிடமும் சொல்லாதே" என்று அறிவுரைகள் சொல்லி அனுப்பி வைத்தார்.

ஒருநாள், அவன் மரத்தடியில் கூடையை வைத்து விட்டு படுத்து கொண்டிருக்கும்பொழுது கூடையில் இருந்து குல்லாக்களை எல்லாம் குரங்குகள் எடுத்து சென்று விட்டது. தூங்கி எழுந்தவுடன், பேரன் கவலைப்படவில்லை. தாத்தா சொன்னபடியே குல்லாக்களை குரங்குகளிடமிருந்து வாங்குவதற்கு தன் தலையில் இருந்த குல்லாவை எடுத்து கீழே போட்டான். ஆனால் மரத்தின் மேலிருந்த குரங்குகள் தன்னுடைய குல்லாக்களை கீழே போடவில்லை. அதைக்கண்டு ஏமாற்றமடைந்து திகைத்து நின்றான்.

அப்பொழுது அதிலிருந்த ஒரு குரங்கு அந்த பேரனை பார்த்து பேசலாயிற்று, "உனக்கு மட்டும்தான் தாத்தா இருக்கின்றார் என்று நினைக்காதே. எங்களுக்கும் தாத்தா உண்டு. அவர் எங்களுக்கு, தான் ஏமாந்த கதையை சொன்னதோடு மட்டுமல்லாமல், நாங்கள் ஏமாறாமல் இருப்பதற்கும் வழியும் சொல்லி சென்றுள்ளார்" என்று கூறி அவனை மேலும் வியப்பில் ஆழ்த்தியது.



*சென்ற மாத நிகழ்ச்சிகள்*



**மார்ச் 12 - திருவண்ணாமலை பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்** நடைபெற்ற ஆராதனை விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி பங்கேற்று அருளுரையாற்றினார். மேலும் அன்று பகவான் யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் எழுதிய "At the feet of my Master" என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பை தமது திருக்கரங்களால் வெளியிட்டார்.

**மார்ச் 18 - சென்னை சமஸ்கிருத கல்லூரி** –சமஸ்கிருத அகாடமி துவங்கி 80வருடங்களுக்கு மேல் ஆனதை ஒட்டி, அதன் வஜ்ர மஹோத்ஸவம், சென்னை சமஸ்கிருத கல்லூரி வளாகத்தில் நடந்தது. இது ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. சமஸ்கிருத கல்லூரியின் President ஸ்ரீமாதவன் அவர்கள் முதலில் ஸ்ரீஸ்வாமிஜியை வரவேற்று பேசினார். இவ்விழாவில் "Sankara and Shanmatha" என்ற ஆங்கில நூலின் புதிய பதிப்பை ஸ்ரீஸ்வாமிஜி வெளியிட்டார். அதன் முதல் பிரதியை ஸ்ரீராமகிருஷ்ணன் (Former Director General of Police, TamilNadu) அவர்கள் பெற்றுக்கொண்டார். பின்னர் சமஸ்கிருத கல்லூரியின் முன்னாள் Professor. Dr வீழிநாதன் அவர்களுக்கு "தர்ஷன கலாநிதி" என்ற விருது சமஸ்கிருத அகாடமி சார்பில் வழங்கப்பட்டது. இவ்விருதை( முன் அட்டைப்படம்) ஸ்ரீஸ்வாமிஜி தனது திருக்கரங்களால் அளித்தார். ஸ்ரீஸ்வாமிஜி, பின்னர் அங்கு கூடியிருந்தோர் முன் அருளுரை வழங்கினார். விழாவில் ஸ்ரீராமகிருஷ்ணன் அவர்கள் உரையாற்றும்பொழுது, "ஸ்ரீவீழிநாதன் அவர்களின் குணங்கள், மேதாவிலாஸம், அவர் எழுதிய நூல்கள், நம்முடைய சனாதன மதத்திற்கு அவர் ஆற்றி வரும் ஞானதானம்" போன்றவற்றை சிலாகித்து பேசினார். விழாவின் நிறைவாக Dr.ஸ்ரீனிவாசன் (Professor, Vivekananda



College) அவர்கள் நன்றியுரையாற்றினார்.



**மார்ச் 14–24 - சென்னை ப்ரேமிக பவனம்** – ராகவசதகம் தினமும் பாடப்பட்டு பூர்த்தி நாளான மார்ச் 24 அன்று ப்ரேமிக பவனத்தில், ஸ்ரீராம நவமி ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**மார்ச் 1–19 - சென்னை ப்ரேமிக பவனம்** – ஸ்ரீவல்லபதாஸ் (முரளி) அவர்கள் மிக அழகாக ராமாயண காவியத்தை பலரும் கேட்டு இன்புறும்வண்ணம், தினமும் மாலை 6.30மணி முதல் 8.30மணி வரை எடுத்துரைத்தார்.








## சனாதனப் புதிர் : பகுதி – 13 விடைகள்

–ஆத்ரேயன்



1. நந்தனார், தில்லை வெட்டியான், பெத்தான் சாம்பான்
2. தாண்டவராய ஸ்வாமிகள் இயற்றிய வேதாந்த நூல், 310 விருத்தங்களை கொண்டது
3. வரதராச அய்யங்கார் இயற்றியது. செவ்வை சூடுவார் இயற்றியது - ஆக இரண்டு பாகவதம் தமிழில் இருக்கின்றது.
4. கச்சபி, மகதி, கலாவதி
5. இராமதேவர் - இயற்பெயர்; சேக்கிழார் குலத்தின் பெயர்.
6. விஷ்ணுசித்தர்
7. வயலூர் - ராஜகம்பீரன் இரண்டாம் இராசராச சோழன். அவர் காலத்தில் ராஜ கம்பீர நாடு என்று இருந்தது. பிறகு வயலூர் ஆனது.
8. பறவை - முதலில் முட்டை. பிறகு முட்டையில் இருந்து வெளிவருவது. அந்தணர்கள் பூணூல் போடுவதற்கு முன்பாக ஒரு பிறவி; பூணூல் போட்ட பிறகு மறுபிறவி. இதை த்விஜன் என்கிறார்கள்.
9. திருவெண்காடு - ஸ்வேதாரண்யம்
10. சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் - திருத்தொண்டத்தொகை; முதல் பாட்டில் முதல் அடி - திருவாரூரில் தியாகராஜப்பெருமான் எடுத்துக்கொடுத்ததாக பெரியபுராணம் கூறுகிறது.

## சனாதனப் புதிர் - பகுதி - 14

(பகுதி 14-ன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

–ஆத்ரேயன்

1. காண்டவ வனம், எத்தனை நாட்களில் அக்னியால் எரிக்கப்பட்டது? அதிலிருந்து தப்பியவர்கள் யார்?
2. மாதலி யாருடைய சாரதி? இவர் மற்ற எவர்களுக்கு சாரதியாக இருந்து இருக்கிறார்?
3. மாதலியின் மனைவி, பெண் இவர்கள் பெயர் என்ன?
4. சத்யஜித் என்பது யார்? பாரதப்போரில் இவருக்கு நடந்தது என்ன?
5. மேகபுஷ்பா - இது எதைக்குறிக்கிறது?
6. நிராமித்தன் - இவர் யார்?

7. புலோமா - இவர் யார்? இவருடைய பிள்ளையின் பெயர் என்ன?

8. நளனின் சாரதி யார்? நளன் சூதாட்டத்தில் நாட்டை இழந்த பிறகு, இந்த சாரதி எங்கு வேலைக்கு அமருகிறார்?

9. மயன் எத்தனை மாதங்களில் யுதிஷ்டிருடைய அரண்மனையை நிர்மாணம் செய்தான்? இந்த அரண்மனையின் பெயர் என்ன?

10. ஏழு சரஸ்வதி தீர்த்தங்கள் பெயர் என்ன? எங்கு இருக்கிறது?

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

GURU CHARANAM SRI GURUBYO NAMAHA BHAVA HARANAM

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI "MURALIDHARA SWAMIJI"

JANAKI PHARMACY

32/17, SUBBA STREET
WEST MAMBALAM
CHENNAI - 33
PH: 044-45512125 (CELL: 9884724271
viswanathan.1071@rediffmail.com
SPECIAL DISCOUNT AVAILABLE

FREE DOOR DELIVERY


CHANT "OM SRI RAM JAI RAM JAI JAI RAM" ENJOY THE SWEETNESS OF RAM NAM



## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

பக்தமாலீஜி - 2



சில நாட்களுக்கு பிறகு பக்தமாலீஜி, பத்னியுடன் ப்ருந்தாவனம் வந்து அங்கேயே வசிக்கலானார். பண்டித் நாமபிரசாத்ஜி என்பவரிடமிருந்து ஸமஸ்கிருதம் பயின்று ஸ்ரீமத்பாகவத பாராயணம் செய்யலானார் பக்தமாலீஜி. சிறிது காலத்திலேயே அவர், ஸ்ரீமத்பாகவதமும் பக்தமால் என்னும் கிரந்தத்தில் வரும் கதைகளையும் ப்ரவசனம் செய்ய ஆரம்பித்து விட்டார். கதையை மிகவும் எளிமையாகவும் சரளமாகவும் கூறுவார். வார்த்தை ஜாலம் எல்லாம் அதில் சற்றும் இருக்காது. கதையை கூறும்பொழுது, அதில் அவர் தன்மயமாகி பாவத்தில் ஆழ்ந்து விடுவார். ஸ்ரோதாக்களும் (கதை கேட்பவர்களும்) பாவ ஸமுத்திரத்தில் மூழ்கி ஆனந்திப்பார்கள். பக்தமாலில் வரும் கதைகளை மிகவும் அழகாக எடுத்துரைத்ததினால்தான், அவருக்கு பக்தமாலீஜி என்றே பெயர் வந்து விட்டது.

ப்ரவசனத்தில் கிடைக்கும் பங்கையெல்லாம், அவர் பங்கிட்டு எல்லோருக்கும் அளித்து விடுவார். ஏனெனில் அவர் பகவத் கதையை, பக்தி சாதனமாக கொண்டிருந்தாரே தவிர ஜீவனோபயமாக கொள்ளவில்லை. இதனால் அவரது பணப்பற்றாக்குறை நீடித்தது. ஆனால் பக்தர்களின் யோகக்ஷேமத்தை பகவான், தானே வஹிக்கிறான். அவரது மகளின் திருமணத்திற்கான செலவு அனைத்தையும், பகவானே பல பக்தர்கள் மூலம் செய்தான். ஒருநாள் ஒரு மூதாட்டி அவரிடம் நூறு ரூபாய் கொடுத்து "எனது கனவில் நேற்று ஸ்ரீக்ருஷ்ணன் தோன்றி உங்களது மகளின் திருமணத்திற்காக இந்த பணத்தை தர சொன்னான்" என்று சொன்னாள். இவ்வாறு அவரது தேவைகளை



பகவான் பூர்த்தி செய்தான்.

பணமில்லாததால் பக்தமாலீஜி தன் விருப்பம்போல் பகவானுக்கு ஆராதனை செய்ய இயலாமல் வருந்தினார். அப்பொழுது பகவானே அவரது கனவில் தோன்றி

"பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி
ததஹம் பக்த்யுபஹ்ருதம் அஶ்னாமி ப்ரயதாத்மன:"
என்று கூறினான்.

பகவான் காலம் கனியும்பொழுது பக்தர்களுக்கு தனது தரிசனத்தை அளிக்கிறான். ஆனால் சில சமயம் அதில் அவன் கபடமாக வந்து சென்று விடுவான். இப்படியும் அவன் கிருபை செய்வது உண்டு. ஒருநாள் பக்தமாலீஜி ஹார்மோனியம் வாசித்தபடியே பஜனை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது வெகு சுந்தரமான பாலகன், ஒருவன் அவர் முன் வந்தமர்ந்து தன்மயத்துடன் பஜனை கேட்கலானான். பக்த மாலீஜி அவனை ராஸநாடகங்களில் வேஷம் போடும் ஒரு பையன் என்றே எண்ணினார். பஜனை முடிந்தவுடன் அந்த பையனிடம் கேட்டார் "குழந்தாய்! நீ எங்கே இருக்கிறாய்?".

"அக்ரூர்காட் -இல் இருக்கும் பத்ரோட் கோயிலில் நான் இருக்கிறேன் என்றான்" அவன்.

"உன் பெயர் என்ன?"

"லட்டு கோபால்"

"அப்படியானால் நீ லட்டு சாப்பிடுவாயா அல்லது பேடா சாப்பிடுவாயா?"

அச்சமயம் பக்தமாலீஜியிடம் லட்டுக்கள் இல்லை. பேடாக்கள் மட்டுமே இருந்தன. அதனால்தான் அவர் இவ்வாறு கேட்டார். பாலகனும் சிரித்தவாறே "பேடா சாப்பிடுவேன்" என்றான். யார் அந்த பாலகன்?

(தொடரும்)



## மாலே மணிவண்ணா – 83

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

மலையில் பொழிந்த மழை, மேகத்திலிருந்து விழுந்த நீர்; அந்த நீர்ப்பெருக்கு காவிரி, கிருஷ்ணா, கோதாவரி என பெயர் பெற்று வரலாம். ஆனால் முடிவில் கலக்கின்ற இடம் கடலல்லவா? மேகத்தில் தோன்றி, மலையில் பொழிந்து, வேறு பெயர் பெற்ற ஆறுகளாக வளர்ந்து, இறுதியில் கடலில் ஒன்றாய் விடுகிறது. மேகம், மலை, கடல் இவை எல்லாவற்றுக்கும் ஒன்றுதான்; இடையில்தான் பெயர் வேறு.

**கல்லிடைப்பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்**
**எல்லை இல் மறைகளாலும் இயம்பரும் பொருள் ஈது என்னத்**
**தொல்லையில் ஒன்றே ஆகி துறை தோறும் பரந்த சூழ்ச்சிப்**
**பல்பெருஞ்ச்சமயம் சொல்லும் பொருளும் போல், பறந்தது அன்றே (கம்ப)**

என்னும் கம்பன் வாக்கையும் நோக்குக.

மலையில் பிறந்து வளர்ந்து கடலில் கலந்த மேக நீர்ப்பெருக்கு, வேதங்களாலும் சொல்லுதற்கரிய பரம்பொருள் இதுவே என்னும்படி, ஆதியில் ஒன்றேயாகி ஆதரிப்போர் கருத்தில் வெவ்வேறு சமயப்பெயர் பூண்டு, பல பெரிய சமயங்களாக காணப்பட்ட சொல்லால் வேறுபட்டாலும், பொருளால் ஒரே பரம்பொருள் என்று ஒன்றே ஆகி இருப்பது போல், கடலில் ஒன்று சேர்ந்து விடுகிறது என்று சர்வ சமய சமரச கம்பனை அனுபவிக்கும்போழுது பரிபாடலையும் உடன் சேர்த்து சிந்திக்கலாம் அல்லவா?

**ஒளி மணிவண்ணன் என்கோ ஒருவன் என்று ஏத்த நின்ற**
**நளிர் மதி சடையன் என்கோ நான்முக கடவுள் என்கோ**
**அளி மகிழ்ந்து உலகம் எல்லாம் படைத்தவை ஏத்த நின்ற**
**களி மலர்த் துளவன் எம்மான் கண்ணனை மாயனையே (திவ்ய 2344)**

**புணர்க்கும் அயனாம் அழிக்கும் அரனாம்**

**புணர்த்ததன் உந்தியோடு ஆகத்து மன்னி**

**புணர்த்த திருவாகித் தன்மார்பில் தான்சேர்**

**புணர்ப்பன் பெரும்புணர்ப்பு எங்கும் புலனே** (திவ்ய 2273) என்ற திருவாய்மொழிப்பாசுரங்களையும் இங்கு இணைத்து காண்க எம்பெருமானாகிய மாலே மணிவண்ணனாக அவதரித்தாற்போலே, அப்பெருமானே தக்ஷிணாமூர்த்தியாக, முருகனாக, அரங்கநாதனாக, கயிலாயநாதனாக வேறு வேறு பெயர்களாக ஆனாலும், எல்லா இடங்களிலும், அவன் ஒருவனே உள்ளான். பெயர்களில் வேறுபடலாம் பொருள் ஒன்றுதான் என்பதை "எவ்வயிநோயும் நீயே" பரி. 4.70. என்ற முடிப்புரையால் கூறினார்.

**தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்தானே**

**தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர் – தமர் உகந்து**

**எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரே**

**அவ்வண்ணம் ஆழியான் ஆம்** ( திவ்ய 3227

என்பது பொய்கையாழ்வாரின் முதல் திருவந்தாதி வாக்கு. அடியார்கள் எப்பெயரிட்டு தன்னை அழைக்கின்றார்களோ அப்பெயர்களே தன்னுடைய பெயர் என கொள்ளுவான் ஆழியான் என்கிறார் ஆழ்வார்.

"அறுவகை சமயத்தொர்க்கும் அவ்வவர் பொருளாய் " என்று அவ்வச்சமயத்தார்க்கும் அவரவர் கொண்ட முதற்பொருளாய் உள்ளவன் சிவபெருமானே என்று சிவஞான சித்தியார் பாடலையும் இங்கு ஒப்பிட்டு கண்டு மகிழலாம்.

சர்க்கரையால் செய்யப்பெற்ற இனிப்புகள் பல பெயர் உடையனவாக உள்ளன ஆனாலும், எல்லா இனிப்புகளுக்கும் மூலப்பொருள் ஒன்றுதான். அது சர்க்கரையல்லவா? பெயர்களில் வேறுபாடு; உருவத்தில் வேறுபாடு; வழிபாட்டு முறைகளில்



வேறுபாடு; ஆனால் வழிபடப்பெறும்பொருளும், வழிபாட்டுக்கு பயன்தரும்பொருளும் ஒன்றேதான் என்பதை உணர்ந்தால் சமயச்சண்டைகளுக்கு, மதமாற்றங்களுக்கு, கடவுள் நெறியில் இடமே இல்லை என்பதை விளக்கவே இத்தகைய அரிய நுட்பமான கருத்துக்கள் இந்திய சமய வழிபாட்டு நூல்களில் அமைந்துள்ளன.

**நின் ஆர்வலர்**

**தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே**

என்ற அடுத்த அடியும் இக்கருத்தை தொடர்ந்து அமைந்து பாதுகாக்கிறது. உன்னுடைய அன்பர்கள் தொழுத கையின் வணக்கத்தின் கண் அகப்பட்டவனும் நீ ஆவாய்.

அறிதற்கரியவனும், பெரியவனும் எல்லார்க்கும் மேலானவனும் ஆகிய அப்பெருமான்தன்னை வழிபடுவார்க்கு எளியவனாய், அங்கே அவர்களிடத்தே வந்து தங்கி, அவர்களுக்கு எளிதாக அகப்பட்டு கொள்கிறானாம்.

அவன் வாக்கு மனாதீதன். சொல்லுக்கும் மனத்துக்கும் எட்டாதவன். ஆயினும் அவன் கோசரண்; எட்டும் பொருளானவன்; நம்மால் அடையக்கூடிய பொருளாக உள்ளவன். ஆராய்ச்சிக்கும் அறிவுக்கும் அகப்படாதவன். அன்பினால் தொழுவார்க்கு தொழுத கையின் வணக்கத்திலேயே, அந்த தொழுத கையின் தாழ்ச்சியிலேயே, அகப்பட்டு கொள்வானாம். நீ செருக்கினால் உயர உயர, அவன் மேலே அகப்படாமல் போகிறான். நீ செருக்கு அகன்று தாழதாழ, தொழ தொழ, அன்பினால் வணங்க வணங்க, உனக்கு எளிமையாய் அகப்பட்டு கொள்கிறான். நீ சொல்வதற்கெல்லாம் உடன்படுகிறான். நீ வேண்டுவனவற்றை எல்லாம் செய்கிறான்.

**அவர் அவர் ஏவலாளனும் நீயே**

**அவர் அவர் செய்ப்பொருட் அரணமும் நீயே**

என்று பரிபாடல் இந்த உண்மையை மேலும் விவரித்து நிறைவு செய்கிறது. (தொடரும்)



***அக்ஷரமணமாலை*** (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-168)

மிஞ்சிடிற்கெஞ்சிடும் கொஞ்சவறிவனியான்

வஞ்சியாதருளெனை யருணாசலா

பகவத் தரிசனம் என்பது நழுவாததாக இருப்பதே சமாதி. பூண்செய் மஹாராஜ் என்ற ஒரு மஹாத்மாவிற்கு சிறு வயதிலிருந்தே க்ருஷ்ண தரிசனம் கிடைத்து வந்திருந்தது. ஒருநாள் ஒரு சாதுவிற்கு அன்னம் அளித்து "பகவானை நேரில் தரிசிக்க ஒரு குரு தேவை. ஒரு நல்ல குருவை சொல்லுங்கள்" என்று கேட்டார். அந்த சாதுவின் ஆலோசனையின் பேரில், திருவண்ணாமலை ரமண மஹரிஷிகளை பார்க்க வந்தார். வந்து பார்த்தவுடன் அதிர்ச்சியடைந்தார். ஏனெனில், இவரை திருவண்ணாமலை வர சொன்னவர்தான், அங்கு உட்கார்ந்து இருந்தார். "பகவான் திருவண்ணாமலையை விட்டு வெளியில் சென்றதே இல்லை" என அங்கு இருந்தோர் சொல்ல அவருக்கு ஆச்சரியம். அவருக்கு மஹரிஷிகள், "பகவத்தரிசனம் நழுவாததாய் சஹஜமாக இருக்க வேண்டும்" என்று கூறி விசாரமார்க்கத்தை போதித்தார் என்றுள்ளது.

அகங்காரமானது நல்லது நடக்கையில், தன் முயற்சியால் நடந்தது என்று சொல்லி பகவானை மறைக்கும். துக்கம் மிகுதியாகும்பொழுது(மிஞ்சிடிற்) இறைவனை அண்டி, துன்பம் விலக வேண்டுகிறோம்(கெஞ்சிடும்). சாதகனான ஒருவன் புலன்களை அவசியமான அளவு மட்டுமே உபயோகிக்க வேண்டும். விவேகியானவன் எதை செய்ய வெண்டும், எதை செய்யலாகாது என்பதை அலசி, விலக்க வேண்டியதை விலக்கி விடுகிறான். அப்படி இல்லாமல், புலன்கள் அவசியத்திற்கு மேல் ஒரு விஷயத்தில் ஈடுபடுமானால், அது மனதை பாதிக்கும். அப்பொழுது புலன்களை அடக்கி தர பகவானை பிரார்த்திக்கிறான் சாதகன். மிகவும் பக்குவப்பட்ட உயர்ந்தவர்கள், குருவின் அருளை நாடி, ("அஹம்" அற்ற) அகங்காரமற்ற சமாதி நிலையை அடைகின்றனர்.

குருவானவர் சீடனுக்கு, துக்கம் எதனால் வருகிறது என்பதை மனதில் ஸ்புரிக்க வைத்து, துக்கத்தின் பாடத்தை உணர்த்துகிறார், மேலும் துக்கத்தை தாங்கும் மனப்பக்குவத்தையும் அனாயாசமாய் அளித்து விடுகிறார்.



துக்கம் வரும்பொழுது நாம் பகவானிடம் ஈடுபடும் அளவிற்கு, சுகம் வரும்பொழுது ஈடுபடுவது இல்லை. (இதனால்தான் (பாகவதத்தில்), குந்திதேவி க்ருஷ்ணனிடம் துக்கத்தை ப்ரார்த்திக்கிறாள்). துக்கம் அதிகமாக இருக்கையில் வந்துள்ளேன் என்பதற்காக என்னை விலக்காதே. ஏனெனில் நான் மந்த அறிவு படைத்தவன் ("கொஞ்ச அறிவனியான்"). என்னால் இந்த துக்கத்தை தாங்க முடியவில்லை. (சாதகனாயின், என்னை புலன்கள் அடிமையாக்குகின்றன; அவற்றை என்னால் வெல்ல முடியவில்லை என்றும் பொருள்படும்). "என்னை வஞ்சிக்காது அருள் செய்வாய் அருணாசலா" என்று இப்பாடலில் பிரார்த்தனை அமைகிறது.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/ டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

| வரும் மாத நிகழ்ச்சிகள் | |
|---|---|
| ஏப்ரல் 10, 24 | ஏகாதசி |
| மார்ச் 28 | ஆம்பூர் |
| மார்ச் 31 to ஏப்ரல் 3 | பெங்களூர் கல்கரே கிராமம், சுந்தர ஆஞ்சநேயர் கோவில் கும்பாபிஷேக இரண்டாம் வருட முடிவு |
| ஏப்ரல் 5 | விஜய் டி.வி. பக்தி திருவிழா துவக்கம் - நாரதகான சபா |
| ஏப்ரல் 15 -21 | கோவிந்தபுரம் சைதன்யகுடீரில் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் சத்சங்கம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.